தலைமை உரையாற்றிய உதவி ஆணையர் (கலால்) அவர்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு வந்த அனைவரையும் வரவேற்றார். தி/ள்.தமிழ்நாடு மினரல்ஸ் லிமிடெட் (பல வண்ண கிரானைட் குவாரி) என்ற கிரானைட் குவாரி தொடர்பாக நாகனூர் கிராமத்தில் புல. எண். 120(Part)–ல் பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டம் அரசு வழிகாட்டுதலின்படி நடத்தப்படுவதாக தெரிவித்தார். இத்திட்டம் தொடர்பான தகவல்கள் ஏற்கனவே இணையதளங்களில் பதிவேற்றம் செய்யப்பட்டு உள்ளதாகவும் தெரிவித்தார். பின்னர் பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை எவ்வித தயக்கமின்றி தெளிவாகவும், சுருக்கமாகவும் தெரிவிக்குமாறும் கேட்டுக்கொண்டார். இந்த பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தில் கலந்து கொள்ளும் பொதுமக்களின் அனைத்து கருத்துக்களும் எவ்வித பாகுபாடுமின்றி அரசுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் தெரிவித்தார். மேலும் இத்திட்டம் தொடர்பான தகவல்களை விளக்கக் காட்சியாக நிறுவனத்தின் திட்ட ஆலோசகர் தற்போது உங்களுக்கு விளக்கமாக தெரிவிக்க உள்ளனர் என்று தெரிவித்தார்.

**சுற்றுச்சூழல் தாக்க அறிக்கை ஆலோசகர், குளோபல் மைனிங் சொல்யுசன்ஸ்:**

இந்த பொதுமக்கள் கருத்துக்கேட்புக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் உதவி ஆணையர் (கலால்) மற்றும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் உள்ளிட்ட அனைத்துத் துறை அரசு அலுவலர்களையும் பத்திரிக்கை நண்பர்களையும், சுற்றுச்சூழல் ஆர்வலர்களையும் மற்றும் காவல்துறை அதிகாரிகளையும் வரவேற்பதாக தெரிவித்தார். இவர் உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டம் குறித்த விவரங்களை கீழ்க்கண்டவாறு விவரித்தார்.

1. நிறுவனத்தின் செயல்பாடு
2. முன்மொழியப்பட்ட குவாரி இருப்பிட விளக்கம்
3. குவாரி தள பகுப்பாய்வு
4. குவாரி பகுதியின் செயற்கைக்கோள் & குவாரியின் மேற்பரப்பு திட்ட வரைப்படம்
5. திட்டத்தளத்தின் புகைப்படம்
6. 500 மீட்டர் சுற்றளவு தொகுப்பு குவாரி கடிதம்
7. சுரங்கக் குத்தகை வழங்கப்படவுள்ள தெள்ளிய பகுதிக்கான தகவல் கடிதம்
8. உகந்த பகுதி அறிக்கை
9. சுரங்க திட்டம் (Mining Plan) அங்கீகாரம் கடிதம்
10. மாவட்ட நகர் மற்றும் ஊரமைப்பு துறையின் கடிதம்
11. குவாரி திட்டத்தின் நிலப்பயன்பாட்டின் முறைமை
12. தொழிலாளர்களின் எண்ணிக்கை
13. இயந்திரங்களின் பட்டியல்
14. குவாரி திட்டத்தின் முக்கிய அம்சங்கள்
15. தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் செயல்பாடுகள்
16. முன்மொழியப்பட்ட பசுமை வளையத்தின் திட்டம்
17. 10 கி.மீ சுற்றளவு சுற்றுச்சூழல் அமைப்புகள்
18. திட்டப்பகுதியை சுற்றி 10கி.மீ. சுற்றளவில் உள்ளடக்கிய டோபோசீட் வரைப்படம்
19. தற்போதைய சுற்றுச்சூழல் நிலைமை
20. சமூக பொருளாதார சூழல்
21. சுற்றுச்சூழல் கண்காணிப்பு விவரங்கள்

22. காற்றின் தன்மை

23. நீரின் தன்மை

24. ஒலி அளவின் ஆய்வு

25. மண்ணின் தன்மை

26. நிலச்சூழல்

27. உயிரியல் சூழல்

28. எதிர்நோக்கும் சுற்றுச்சூழல் தாக்கம் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள்

29. நிலச்சூழல்

30. காற்றுச்சூழல்

31. நீர் சூழல்

32. ஒலி சூழல்

33. எதிர்நோக்கும் சுற்றுச்சூழல் தாக்கம் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள்

34. முன்மொழியப்பட்ட பெருநிறுவன சுற்றுச்சூழல் பொறுப்பு

35. சுற்றுச்சூழல் கண்காணிப்பு திட்டம்

36. முடிவுரை

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்:**

பொதுமக்கள் தங்களது பெயர் மற்றும் முகவரியினை பதிவு செய்துவிட்டு இத்திட்டம் குறித்த கருத்துக்களை தெரிவிக்குமாறு கூறினார்.

1. **திரு.ந.சண்முகம், சட்ட விரோத கல்குவாரி எதிர்ப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர், கரூர்:**

தமிழ்நாடு மாவட்ட நிர்வாகமும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியமும் இணைந்து நடத்தும் தமிழ்நாடு மினரல்ஸ் குவாரியின் கருத்துக்கேட்புக் கூட்டத்திற்கு தலைமையேற்று நடத்திக் கொண்டிருக்கும் மாவட்ட மாசு கட்டுப்பாடு வாரிய அதிகாரி அவர்களுக்கும், கலால் உதவி ஆணையர் அவர்களுக்கும் இங்கு கூடியிருக்கும் அனைவருக்கும், முதற்கண் எங்களது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். ஒரு கல்குவாரி அல்லது கிரானைட் குவாரி அமைய வேண்டுமானால், தமிழ்நாடு சிறுகனிம விதிகள் 1959 விதிபடிதான் இயங்க வேண்டும்.

இப்பொழுது தமிழ்நாடு மினரல்ஸ் வாயிலாக இயங்கக் கூடிய அரசின் இந்த கல்குவாரியானது தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதிப்படி இயங்கவில்லை. பல்வேறு விதிமீறல்கள் இந்த கிரானைட் குவாரியில் உள்ளது. நாங்கள் ஒவ்வொரு கல்குவாரி கூட்டத்திலும் கூறுகிறோம். உட்பிரிவு செய்யாமல் எந்த கிரானைட் குவாரியாக இருந்தாலும் அதற்கு கிராம நிர்வாக அலுவலர் அனுமதி கொடுக்கக் கூடாது என்கிறோம், கிட்டத்தட்ட 150 க்கும் மேற்பட்ட குவாரி மற்றும் கிரானைட் குவாரியின் கூட்டத்தில் பங்கேற்றுள்ளோம். இந்த குவாரியிலும் புல எண் 120 (பகுதி) கிட்டத்தட்ட 25 ஏக்கரில் குவாரி இயங்குகிறது என்கிறார்கள். இதனை உட்பிரிவு செய்வதனால் உங்களுக்கு என்ன சிரமம் என்று தெரியவில்லை.

நாங்கள் கடந்த செப்டம்பர் மாதம் – 19 ந்தேதி கூட இதனைப் போன்ற விதிமீறல்கள் எந்த கிரானைட் குவாரி, கல்குவாரிகாரர்களும் செயல்படுத்தப்படுவதில்லை என்பதற்காக மாநில சுற்றுச்சூழல் ஆணையத்தின் முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்தி கிட்டடத்தட்ட 250 பேர் கைது செய்யப்பட்டோம். எங்களிடம் பேச்சு வார்த்தை நடத்தி இனிமேல் இதெல்லாம் நடைமுறைப்படுத்தப்படும் என்றார்கள். ஆனால் இன்றுவரை நடைமுறைப்படவில்லை. இந்த குவாரிக்கும் உட்பிரிவு இல்லை. இந்த குவாரிக்கு அனுமதி கொடுக்கக்கூடாது. ஏனெனில் தமிழ்நாடு சிறு கனிம சலுகை விதிப்படி அங்கீகரிக்கப்பட்ட வீடுகள், வீட்டுமனைகள், நிரந்தரக் கட்டுமானங்கள்

ஆகியவை இருந்தால் சிறுகனிம சலுகை விதிகள் 1959, பிரிவு 39–ன் படி அனுமதி கொடுக்கமுடியாது.

அங்கீகரிக்கப்ட்ட வீடுகள், ஊராட்சி மற்றும் DTCP யினால் அங்கீகரிக்கப்பட்ட வீட்டுமனைகள், ஊர் நத்தம் கோவில் போன்ற நிரந்தரக் கட்டுமானங்கள் அரசின் தொகுப்பு வீடுகள், பசுமை வீடுகள், வங்கிக் கடன் பெற்று கட்டப்பட்ட வீடுகள் இருந்தால் 300 மீ இடைவெளிவிட்டுத்தான் குவாரிப்பணி செய்ய வேண்டும் என்று விதி கூறுகிறது. ஆனால் இந்த நாகனூர் கிராமத்தில் மேற்குப்புறத்தில் புல எண் 118 ல் வீடுகள் உள்ளது. இது அ பதிவேட்டில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அதேபோல கல்குவாரிப் புலத்தின் தெற்குப்புறத்தில் 291 வது மீட்டரில் வீடு மற்றும் ஊர் நத்தம் உள்ளது. இது வருவாய் ஆவணமான கணினிப் புல வரைபடத்திலும் காட்டப்பட்டுள்ளது.

இதேபோல் கல்குவாரி புலத்தின் தெற்குப்புறத்தில் புல எண் 151 ல் 120 வது மீட்டரிலும் அதேபோல் 190–வது மீட்டரில் 10 க்கும் மேற்பட்ட வீடுகள், வீட்டுமனைகள் உள்ளது. இது வருவாய் ஆவணமான கிராம வரைடம், கணினி புலவரைபடத்திலும், FM Reader லும் காட்டப்பட்டுள்ளது. அப்படியென்றால் இந்த குவாரியைச் சுற்றி கிட்டத்தட்ட 30 க்கும் அதிகமான வீடுகள் உள்ளது. எனவே இந்த கிரானைட் குவாரிக்கு எந்த விதத்திலும் அனுமதி கொடுக்கக்கூடாது. ஏற்கனவே இந்த குவாரிக்கு கொடுக்கப்பட்ட அனுமதி எதன் அடிப்படையில் கொடுக்கப்பட்டது என்பது தெரியவில்லை.

தமிழ்நாட்டில் செயல்படக்கூடிய அனைத்துக் குவாரிகளுமே பார்த்தால் விதிமீறல்கள் உள்ளது. குவாரிப்புலத்தின் தெற்குப் பகுதியில் புல எண் 152 மற்றும் 140 ஆவது மீட்டரில் ஒரு வீடு உள்ளது. இது வருவாய் ஆவணமான கணினிப் புல வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது. கல்குவாரி அதிகாரிகள் தவறான வருவாய் ஆணவங்களில் சுட்டியாகக் காட்டப்படும் வீட்டில் யாரும் குடியிருக்கவில்லை. வீடு தற்போது இடிந்துவிட்டது. வீடு சேதாரமடைந்துள்ளது எனத் தவறுதலாக இருந்தாலும் அது வீடுதான் என்று TOPO sketch மற்றும் அ–பதிவேட்டில் கூறுகிறார்கள். தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதிப்படி UDR வருவாய் ஆவணங்களில் சுட்டியாக இருந்தாலே வீடு சிதிலடைந்திருந்தாலும் அது வீடு மற்றும் வீட்டுமனைதான் என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு 300 மீட்டர் சுற்றளவில் பல்வேறு விதமான வீடுகள் இருப்பதால் இந்த குவாரிக்கு அனுமதி தரமுடியாது. மேலும் இந்த குவாரியைச் சுற்றி போடப்பட்டுள்ள வண்டிப்பாதை மற்றும் நடைபாதையாக இருந்தால் 10 மீட்டர் அதாவது 30 அடி இடைவெளி இருக்க வேண்டும் என்று சிறுகனிம சலுகை விதி கூறுகிறது. ஆனால் இந்தக் கல்குவாரியின் தென்புறத்தில் புல எண். 117ல் வண்டிப்பாதை உள்ளது. இந்த வண்டிப்பாதைக்கு 10 மீட்டர் இடைவெளி இல்லை. குவாரியின் தெற்கு மற்றும் கிழக்குப் பகுதியில் உள்ள வண்டிப்பாதைக்கு 10 மீட்டர் இடைவெளி இல்லாததால் இது அரசு விதிகள் மற்றும் சிறுகனிம சலுகை விதிகள் 1959–ன் படி சட்டத்தின் அனுமதி இல்லாததால் இக்குவாரிக்கு அனுமதி வழங்கக்கூடாது. சென்னை உதவி ஆணையர்களால் அதாவது நில நிர்வாகம் அவர்கள் தனியார் பட்டா நிலத்தில் இருந்தாலும், நிலவியல்பாதை மற்றும் ஓடை, குஸ்திப் பாதை ஆகியவை அரசின் சொத்து என்று தெளிவாகக் கூறுகிறது. எனவே வண்டிப்பாதை தனியார் பட்டா நிலத்தில் இருந்தாலும் அது சட்டப்படி அரசு சொத்துதான்.

இந்தப் புலவரைபடத்தில் காட்டப்படும் வண்டிப்பாதை, கல்குவாரி அருகிலேயே அமைந்துள்ளதால் அந்த 10 மீட்டர் இடைவெளி இல்லாத காரணத்தினால் இந்த குவாரிக்கு எந்த விதத்திலும் அனுமதி தரக்கூடாது. மேலும் ஓடை மற்றும் நீர்நிலைகள் இருந்தால் 50 மீட்டர் அதாவது 175 அடி இடைவெளி விட வேண்டும் என தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதி கூறுகிறது, ஆனால் இக்குவாரியின் தென்புறத்தில் வெங்கடேசன் குளம் உள்ளது. இந்த நீர்நிலை 50 மீட்டர் இடைவெளிக்குப் பதிலாக 10 மீட்டர் இடைவெளி கூட இல்லாமல் இந்த குவாரி இயங்கி இருக்கிறது.

எனவே இக்குவாரிக்கு அனுமதி கொடுக்கக்கூடாது. வண்டிப்பாதை தனியார் இடத்தில் இருந்தாலும் அரசுக்கு சொந்தமானதுதான். இந்தக் குவாரிக்கு எந்த விதத்திலும் அனுமதி கொடுக்கக்கூடாது. மேலும் இந்தக் குவாரியின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை பக்கம் 75 A–ல் வீடு இருப்பது தெரிகிறது. இக்குவாரியில் வெடிவைக்கும்போது குவாரிக்கு அருகில் உள்ள வீடுகள் பாதிக்கப்படும். விருதுநகர் மாவட்டத்தில் கடந்த 6 மாதங்கள்களுக்கு முன்னர் மிகப்பெரிய அளவில் வெடி விபத்து ஏற்பட்டு கிட்டத்தட்ட 7 பேர் இறந்துவிட்டனர். 3 கி.மீ சுற்றளவுக்கு பாதிப்பு உள்ளது. அதன் அடிப்படையிலும் இந்தக் குவாரிக்கு அனுமதி கொடுக்க முடியாது.

மேலும் கூகுள் வரைபடத்தில் கிட்டத்தட்ட 30 க்கும் மேற்பட்ட வீடுகள் தென்மேற்குப் புறத்தில் 291 மீட்டரில் மற்றும் வீடுகள், ஊர் நத்தம், கிழக்கில் 77 மீட்டர், 149 மீட்டர், 157 மீட்டர், 218 மீட்டரிலும் மேற்கில் 149 மீட்டர், 292 மீட்டர் தெற்குப்பகுதியில் 275 மீட்டர் வீடுகள் உள்ளது. இத்தனை வீடுகள் இருக்கும்பொழுது எப்படி இந்த கிரானைட் குவாரிக்கு அனுமதி கொடுக்க முடியும். குவாரியை ஒட்டி 300 மீட்டரில் மேட்டுப்பட்டி கிராமம் உள்ளது. இங்கு மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி, ஆழ்துளைக்கிணறு, ஆகியவை இருந்தால் 500 மீட்டர் இடைவெளி விட வேண்டும் என்று தமிழ்நாடு சிறுகனிம விதி கூறுகிறது. குவாரியின் தென்மேற்குப் பகுதியில் 270 மீட்டர் அங்கீகரிக்கப்பட்ட வீடுகள், வீட்டுமனைகள் உள்ளது. அதேபோல் 500 மீட்டர் சுற்றளவில் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி, அரசின் ஆழ்துளைக் கிணறு ஆகியவை உள்ளது. எனவே இதற்கு அனுமதி கொடுக்கக்கூடாது. தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதிகளின்படி இத்தனை விதிமீறல்கள் இருப்பதால் இந்த கிரானைட் குவாரிக்கு அனுமதி கொடுக்க முடியாது.

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையோடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் தெரிவித்துள்ள Terms of Reference Annexure-ல் 45 வகையான ஆவணங்கள் இணைத்துக் கொடுக்க வேண்டும். நாங்கள் ஒவ்வொரு கருத்துக்கேட்புக் கூட்டத்திலும் தொடர்ந்து கூறிக்கொண்டு இருக்கிறோம். 45 வகையான ஆவணங்கள் இருந்தால் தான் எங்களால் கருத்துக் கூற முடியும், கடந்த 2021 ஆம் ஆண்டு கோவை மாவட்டம், சூலூர் வட்டத்தில் பரமசிவம் கல்குவாரிக்கு 1300 பக்க இணைப்பு ஆவணங்கள் 45 வகையான ஆவணங்களும் இணைக்கப்பட்டிருந்தது. அந்த மாதிரி அனைத்து ஆவணங்களையும் இணைக்க வேண்டும் என்று மாவட்ட மாசு கட்டுப்பாட்டு அதிகாரியிடம் தொடர்ந்து கேட்டுக்கொள்கிறோம்.

இதில் 15 வகையான ஆவணங்கள் தான் இணைக்கப்பட்டிருக்கிறது. எனவே 45 வகையான ஆவணங்களை இணைத்து தான் இந்த கருத்துக்கேட்புக் கூட்டத்தையே நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் தெரிவித்துள்ள குறிப்பு விதிமுறைகள் காற்று, நீர், மண், பல்லுயிர்சூழல், பொருளாதார சூழல், Terms of Reference 11.03.2025 என்று கூறி குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் இதற்கு முன்னே 01.12.2024 முதல் 08.02.2025 வரை ஆய்வுக்கு கொடுக்கப்பட்ட பொய்யான தகவலை சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையில் கொடுத்துள்ளார்கள். இதையும் பார்த்தீர்கள் என்றால் தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதிக்கு தவறாக உள்ளது. எனவே கல்குவாரிக்கு அனுமதி கொடுக்கக்கூடாது. மேலும் இந்தக் கல்குவாரியைச் சுற்றிய புள்ளிவிபரங்கள் தெளிவாக கொடுக்கவில்லை.

மொத்தத்தில் இந்த பகுதியே 10.12 ஹெக்டேர் என்று கொடுத்திருக்கிறார்கள். இதனை பிரிக்காததால் தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதிப்படி இதனையும் ஏற்றுக்கொள்ள முடியாது. குவாரியும் அமைய வேண்டுமெனில் நிலச்சூழல், நீர்சூழல், காற்றுச்சூழல், பல்லுயிர்சூழல், ஒலிச்சூழல், சமூக பொருளாதார சூழல், எவ்வாறு கணிக்கின்றோம் என்ற காரணத்தால்தான் கருத்துக்கேட்புக்

கூட்டமே நடத்துகிறார்கள். இந்த குவாரியை 58 மீட்டர் ஆழத்திற்கு வெட்டி எடுத்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட 188 அடி வெட்டி எடுக்கப்போகிறார்கள். ஆனால் இந்தக் குவாரியில் நிலத்தடி நீர்மட்டம் 50மீட்டர் 150 அடிதான் இருக்கிறது. இந்தக் குவாரியைச் சுற்றி 3 மீட்டர் சுற்றளவில் ஓடைகள் உள்ளன. இந்தப்பகுதி மக்கள் இந்த ஓடையை நம்பிதான் விவசாயம் செய்கிறார்கள். இந்தப் பகுதியில் வெங்கடாசலம் குளம், கொசவன் குட்டை, வெள்ளைக்குளம் 58 அடி வெட்டி எடுத்தால் இப்பகுதியில் இருக்கும் நிலத்தடி நீர் அனைத்துமே இந்த கிரானைட் குவாரியினால் பாதிக்கப்படும். இந்தப் பகுதியில் எவ்வாறு விவசாயம் செய்வார்கள். 10 ஆண்டுகளாகவே தண்ணீர் இல்லாமல் காவேரி தண்ணீரைதான் வாங்கி குடித்துக்கொண்டிருக்கிறோம் அதிலும் பல்வேறு வகையான இரசாயனம் கலந்துள்ளதால் குடிக்க முடியாத சூழல் உள்ளது.

ஆடு, மாடுகள் அனைத்துமே நிலத்தடி நீரை நம்பிதான் உள்ளது. 188 அடி 190 அடி வெட்டி எடுத்தால் இந்தப்பகுதியின் விவசாய நிலங்கள் அனைத்தும் பாதிக்கப்படும். இங்கு மக்கள் வாழ முடியாத சூழல் ஏற்படும். அனைத்தும் கிரானைட் குவாரியாகவே மாறிவிடும். தமிழ்நாடு அரசும், மத்திய அரசும், விவசாய நிலத்தை ஆதரிப்பதாக கூறுகிறார்கள். ஆனால் இங்கு பல்வேறு விதமான தொழிற்சாலைகளை கொண்டு வந்து விவசாயத்தை அழித்துக்கொண்டிருக்கிறார்கள். உள்ளூர் மக்களுக்கும் இதில் வேலை வாய்ப்புக் கிடையாது. இந்த குவாரி ஏற்கனவே இயங்கிய குவாரி, பசுமை அரண்கள் வைக்கின்றோம் என்கிறார்கள், ஒரு ஹெக்டேருக்கு 500 மரக்கன்றுகள் என்கிறார்கள்.

இக்குவாரி 10 ஹெக்டேர் ஏற்கனவே இயங்கிய குவாரி. எத்தனை மரக்கன்றுகள் வைத்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை. இப்போதும் வைப்பார்களா? என்று தெரியவில்லை. தமிழ்நாட்டிலேயே அதிக வெப்பம் உள்ள மாவட்டம் கரூர். 103,104 டிகிரி உள்ளது. அனைத்துப் பகுதிகளிலும் மழை பெய்கிறது. கரூரில் மட்டும் மழை இல்லை. கல்குவாரியின் அதிகப்படியான பாதிப்புகளால்தான் மழை பாதிக்கப்படுகிறது. அதேபோல் வெடி விபத்து அதிகமாக உள்ளது. சட்டத்திற்குட்பட்டு இயங்கும் கல்குவாரியும் சரி, சட்டவிரோதமாக இயங்கும் கல்குவாரியும் சரி, அளவுக்கு அதிகமாக வெட்டி எடுக்கிறார்கள். அதற்கு வெடிமருந்து எங்கிருந்து கிடைக்கிறது என்பதை ஆய்வு செய்து அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதேபோல் தொடர்ந்து கரூர் மாவட்டத்தில் 10 நாட்களுக்கு ஒரு தடவை பெரிய டம் என்று சத்தம் கேட்கின்றது. கதவுகள் அதிர்கின்றது. எதனால் என்று புவியியல் மற்றும் சுரங்கத் துறையிடம் கேட்டால், நாங்கள் புவியியல் மேலாண்மைத்துறை சென்னையில் கூறியிருக்கிறோம் என்று கூறுகிறார்கள். தொழிலாளர்களுக்கு ஏதேனும் உதவி செய்வார்கள் என்றால் கல்குவாரிகள் எந்த உதவியும் செய்வதில்லை. இதுவரைக்கும் கரூர் மாவட்டத்தில் 3 வருடத்தில் 20க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இறந்து இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு எந்த உதவியும் கிடைப்பதில்லை. PF, இன்சூரன்ஸ் எதுவும் கிடையாது. அனைத்தும் எழுத்துப்பூர்வமாகதான் காட்டுகிறார்கள். செயல்பாடுகள் எதுவும் இல்லை. தமிழ்நாடு விவசாய பூமியாக உள்ளது. விவசாயிகள் நன்றாக வாழவேண்டும். இந்தக் குவாரி வந்தால் இன்னும் 10 ஆண்டுகளில் தோகைமலை பகுதியே பாலைவனமாகி விடும்.

500, 600 அடிகளில் ஆழ்துளைகிணறு அமைத்தால்கூட தண்ணீர் கிடைக்காது. அனைத்து தண்ணீரும் கிரானைட் குவாரிக்குள் சென்றுவிடும். இங்கு விவசாயம் செய்ய முடியாது. இங்கு ஆடு, மாடு, விவசாயத்தை நம்பி இருப்பவர்கள் மிகவும் பாதிக்கப்படுவார்கள். இந்தப் பகுதியில் இந்தக் குவாரியைச் சுற்றி 500 மீட்டர் சுற்றளவில் 7க்கும் மேற்பட்ட குவாரிகள் இயங்கிக் கொண்டிருக்கிறது.

பசுமை அரணும் இல்லை. ஒவ்வொரு வண்டியும் 10 டன் தான் கொண்டு செல்ல வேண்டும் என்று பஞ்சாயத்து விதி கூறுகிறது.

28 டன் தேசிய நெடுஞ்சாலை 48 டன் அதற்கு மேலே கொண்டு செல்வதற்கு எந்த அனுமதியும் இல்லை. 80 டன், 90 டன் அளவிற்கு ஒவ்வொரு வண்டியும் அப்படியே பறந்துகொண்டு செல்கிறது. இந்த சாலைக்காக இந்தியாவின் நிதியில் 20 சதவீதம் நெடுஞ்சாலைக்காகவும் , பஞ்சாயத்து சாலைக்காவும் செலவிடுகிறது. இவர்கள் வெறும் 2 சதவீதம் கொடுத்துவிட்டு கிராமத்திற்கு இதை செய்கிறோம், அதைச் செய்கிறோம் என்கிறார்கள். இதனால் சாலை மிகப் பெரிய அளவு பாதிக்கப்படுகிறது, நாங்கள் வட்டாட்சியர் அவர்களிடம் போக்குவரத்துத்துறைக்குச் சென்று தகவல் அறியும் உரிமைச்சட்டத்தில் கேட்டதற்கு சென்ற வருடத்தில் ஒரு லாரியைத் தான் பிடித்துள்ளோம் என்கிறார்கள். ஆனால் இங்கு செல்ல கூடிய கரூரிலிருந்து தோகைமலை வழியாக செல்லும் அனைத்து லாரிகளும் அதிக எடையுடன் செல்கிறது.

80 மற்றும் 90 டன் எடை கொண்டது. சாலையில் 28 டன்னுக்கு மேலே செல்லக்கூடாது என்று சட்டம் உள்ளது. ஒன்றிய அரசு கூறியுள்ளது. உச்சநீதிமன்றமும் ஒரு வழக்கில் தீர்ப்பு கூறியிருக்கிறது. அதையும் மீறி இந்தப் பகுதியில் பார்த்தால் 90 டன் அளவிற்கு கொண்டு செல்கிறார்கள் இவையனைத்தும் சட்டத்தை மீறி செய்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் தண்ணீர் தெளிக்கிறேன் என்கிறார்கள். கரூரில் இருந்து வரும்பொழுது கிட்டத்தட்ட 50 லாரிகள் செல்கிறது. மணல் பறக்கின்றது எதிலும் தண்ணீர் தெளிப்பது போல் தெரியவில்லை. தலைக்கவசம் அணியாமல் வந்தால் நாமே கீழே விழ வேண்டியதுதான். அதேபோல் சாலையில் அதிக பாரம் ஏற்றிச்செல்வதால் அந்த சாலை பள்ளம் ஏற்பட்டு தடுமாறக்கூடிய சூழல் ஏற்பட்டிருக்கிறது. இவ்வாறாக சாலையில் மக்கள் செல்ல முடியாத சூழல் உள்ளது. விவசாய நிலம் மிகவும் பாதிக்கப்படும். இந்த நாகனூர் குவாரிக்கு எக்காரணம் கொண்டும் அனுமதி வழங்க கூடாது. அப்படி வழங்கினால் இந்தப்பகுதி மிகப்பெரிய அளவில் பாதிக்கப்படும். எனவே இந்தக் குவாரிக்கு அனுமதி தரக்கூடாது என்று கூறி வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறுகிறேன். நன்றி வணக்கம்.

**2. <u>திருமதி. நல்லம்மாள், மேட்டுப்பட்டி:</u>**

அனைவருக்கும் மதிய வணக்கம். கனிம வள அலுவலர் அவர்களுக்கு எங்களது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். நாங்கள் நாகனூர் கிராமம் மேட்டுப்பட்டியில் வசிக்கும் நல்லம்மாள் பேசுகிறேன். எங்கள் மகளிர் குழுப் பெண்கள், ஆண்கள் அனைவரும் ஜல்லிக் கற்களை உடைத்துக்கொட்டுவார்கள். நாங்கள் புடைப்போம் எனவே கனிம நிர்வாகமானது வேலை செய்தால் கூலி வேலை செய்யும் நாங்கள் ஜல்லி, அரளை அனைத்தும் உடைத்துப் பிழைத்தோம். இப்பொழுது குவாரி வேலை செய்யவில்லை. எங்களுக்கு பணம் சம்பாதிக்கும் வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. அனைவரும் திருச்சிக்குத்தான் வேலைக்கு செல்கிறோம். மறுபடியும் இக்குவாரி வேலை செய்தால் எங்களுக்கு வேலை வாய்ப்புக்கொடுக்குமாறு அனுமதி வழங்க வந்திருக்கும் அய்யா அவர்களை கேட்டுக்கொள்கிறோம். இந்த குவாரிக்கு அனுமதி கொடுப்பதால் மீண்டும் எங்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்குமென்று அய்யா அவர்களுக்கு கூறிக்கொள்கிறேன்.

**3. <u>திரு.M. நாகராஜன், மேட்டுப்பட்டி:</u>**

என் பெயர் நாகராஜன். நாகனூர் கிராமம் இந்தக் குவாரி வந்தால் நாங்கள் பிழைத்துக்கொள்வோம். நன்றி

**4. திரு.K.தங்கராசு, தோகைமலை:**

நாங்கன் முன்பு இந்த பாறைத்தொழில்தான் செய்தோம். முன்பு சுயஉதவிக் குழுவில் இருந்தோம். வேலைவாய்ப்பு நிறைய கிடைத்தது. இப்பொழுது 20 வருடங்களாக பாறை உடைக்காததால் நாங்கள் திருச்சி மணப்பாறை போன்ற பகுதிகளுக்கு வேலைக்குச் செல்கிறோம். சரியான வேலை அமைவதில்லை. சரியான கூலியும் கொடுப்பதில்லை. எங்களுக்கு இந்த தொழில்தான் நிரந்தரமானது. இந்தத் தொழில்தான் எங்களுக்கு வேண்டும். வேறு எந்த வேலையும் நாங்கள் கற்றுக்கொள்ளவில்லை. இந்தத் தொழில் வந்தால் எங்கள் பகுதி மக்களுக்கு நன்றாக இருக்கும். எனவே இந்தத் தொழிலை அமைத்துத் தரும்படி அரசு அதிகாரிகளுக்கும், ஊர் கிராம நிர்வாகத்தினருக்கும் கூறிக்கொள்கிறேன். அனைவருக்கும் நன்றி வணக்கம்.

**5. திரு.C.மோகன்ராஜ், தேவர்மலை:**

கருத்துக் கேட்புக் கூட்டத்தினை தலைமையேற்று நடத்திக் கொண்டிருக்கும் உதவி ஆணையர் அவர்களுக்கும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுக்கும், விவசாய பெருங்குடி மக்களுக்கும் சுற்றுச்சூழல் ஆர்வலர் அவர்களுக்கும் என்னுடைய காலை வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு கிரானைட் குவாரி அமைப்பது அரசு நிறுவனமாக இருந்தாலும் எதிர்காலத்தில் இது சுற்றுச்சூழலுக்கும் ஏனைய பொதுமக்களுக்கும் விவசாயிகளுக்கும் பாதிப்பை உண்டாக்கும் என்ற வகையில் அனுமதி வழங்கக்கூடாது என்றும் என்னுடைய கோரிக்கையை முன் வைக்கின்றேன். ஏனென்றால் இன்றைக்கு அரசு நிலங்கள் அனைத்தும் அரசுக்கு வருமானம் பெருகலாம் என்று இங்கு அறிக்கையை வாசிக்கும்போது கூறினார்கள். அரசுக்கு வருமானம் பெருகுவதற்கு வெவ்வேறு தொழில்களை செய்யலாம்.

ஏனைய தொழில்கள் வாயிலாக செலவினங்களை ஈட்டலாம். அதனால் எதிர்காலத்தில் அந்த திட்டமானது இங்கு சுற்றியுள்ள மக்களை வெவ்வேறு வகையில் வெகுவாக பாதிக்கும். இந்த கிராமத்தில் உள்ள சில மக்கள் கூறினார்கள். எங்களுக்கு வேலைவாய்ப்பு இல்லை என்று அதிகபட்சமாக 40 நபர்களுக்குத்தான் வேலைவாய்ப்பு கொடுக்க முடியும் என்று கூறினார்கள். 40 நபர்களுக்குத்தான் வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று கூறுகிறார்கள். 40 நபர்களைத் தவிர இங்கு 4000 மக்கள் பாதிக்கப்படுவார்கள் கிட்டத்தட்ட 5000 ஆயிரம் ஏக்கருக்கு மேல் இங்கு பாதிக்கப்படும்.

எனவே இந்த கிரானைட் குவாரி மட்டுமில்லாமல் 500–க்கும் மேற்பட்ட கிரானைட் குவாரிகள் இருப்பதாக கூறுகிறார்கள். ஏனைய சுண்ணாம்புக்கல் குவாரிகள் இருப்பதாக கூறுகிறார்கள். எனவே இந்த ஏரியாவைச் சுற்றிலும் கற்களை பறித்து தோண்டி எடுத்துவிட்டால் நிலத்தடி நீர் மிகவும் கீழே சென்றுவிடும். நிலத்தடி நீர் கீழே சென்றுவிட்டால் எதிர்காலத்தில் குடிப்பதற்கு தண்ணீர் இல்லாமல் இன்னும் சொல்லப்போனால் விவசாயமே செய்ய முடியாது. நாம் அனைவரும் அகதிகளாக வெளியூர்களுக்கு செல்லக்கூடிய சூழ்நிலை உருவாகும். எனவே இந்தக் கிரானைட் குவாரிக்கு அனுமதி அளிக்கக் கூடாது என்ற கோரிக்கையை வைத்து விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.

**6. திரு.சம்சுதின், தோகைமலை:**

உதவி ஆணையர் அவர்களுக்கும், மாசுகட்டுப்பாடு வாரிய அதிகாரி அவர்களுக்கும் வணக்கம். எனக்கு தெரிந்து இந்த குவாரியில் 50 குடும்பம் மட்டுமல்லாமல் 500 குடும்பங்கள் இந்தக்குவாரியை நம்பித்தான் வாழ்கின்றன. இந்தக்குவாரிக்கு அருகில் தான் எங்களுடைய தோட்டம் 10 ஏக்கர் உள்ளது. எந்தவித பாதிப்பும் கிடையாது. தண்ணீர் வசதி அருமையாக உள்ளது. நான் அவர்களுக்கு பெருமையாக பேசவில்லை. இந்தக் குவாரி இருந்தால் ஏழை எளிய மக்களின்

வாழ்வுநலம் பெறும். நாடும் செழிக்கும் நல்ல மழையும் பெய்யும். அதுமட்டுமல்லாமல் இந்தக் குவாரியில் கல், ஜல்லி, உடைத்து எத்தனையோ ஏழை, எளிய மக்கள் பிழைத்துள்ளார்கள்.

நான் வரும்போது கூட கூறினார்கள். குவாரி வேண்டும் என்றால் தமிழ்நாட்டுக்கும் பெருமை மற்றவருக்கும் பெருமை. இந்தக் குவாரி தோகைமலை பகுதி மக்களுக்கு தேவை. எந்தவிதமான பாதிப்பும் இல்லை. எங்கள் இடத்தில் இப்பவும் 10 ஏக்கர் நிலத்தில் தண்ணீர் பாய்கிறது. ஒருவர் கூறினார்கள் இந்தக் குவாரி நடந்தால் தண்ணீர் இருக்காது என்று கூறினார்கள். எங்கள் தோட்டம் நாகனூரில் உள்ளது. 10 ஏக்கர் தண்ணீர் பாய்கிறது. ஆகையால் இந்தக் குவாரியால் யாருக்கும் எந்தவித பாதிப்பும் இல்லை என்று கூறினார்.

**7. திரு.N.V.நாகராஜன், கடலூர்:**

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கரூர் மாவட்ட நிர்வாகமும் இணைந்து நடத்தும் இந்தப் பொதுமக்கள் கருத்துக்கேட்புக் கூட்டத்திற்கு தலைமையேற்று நடத்திக் கொண்டிருக்கின்ற மதிப்பிற்குரிய கலாம் உதவி ஆணையர் அவர்கள், மாவட்ட சுற்றுச் சூழல்பொறியாளர் அவர்கள் மற்றும் ஏனைய அரசு அலுவலர்களுக்கும் விவசாய பெருங்குடி மக்களுக்கும், சமூக செயல்பாட்டாளர் அவர்களுக்கும் மற்றும் காவல்துறை பத்திரிக்கை நண்பர்கள் அனைவருக்கும் என் மதிய வணக்கத்தினை தெரிவித்துக்கொண்டு கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், நாகனூர் கிராமம், சர்வே எண். 120ல்கிரானைட் குவாரி நடத்துவது சம்பந்தமாக இங்கே நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் சட்டவிரோதமானது.

கனிமத்துறை, மாசுகட்டுப்பாடு வாரியம் மற்றும் வருவாய்துறை போன்ற துறைகள் இந்தக் குவாரியை ஆய்வு செய்திருந்தால் ஆய்வு செய்து முறையாக அறிக்கை சமர்பித்திருந்தால் இந்தக் குவாரிக்கான கருத்துக்கேட்புக்கூட்டம் நடப்பதற்கான அவசியமே இருந்திருக்காது. காரணம் இந்தக் கருத்துக் கேட்புக் கூட்டத்தினுடைய 25 ஏக்கருக்குமேலே நிலத்தில் அதில் ஒரு பகுதியை மட்டும் வெட்டி எடுக்கிறோம் என்று கூறுகிறார்கள்.20 ஆண்டுகளுக்கு முன்பு இதே கருத்துக்கேட்புக்கூட்டம் தமிழ்நாடு சிறுகனிம சலுகைவிதி சட்டத்தின்படி நடத்தப்பட்டிருந்தது. அன்றைய சூழலில் அப்போது இருந்தபோது மக்கள் கருத்து கூறியிருப்பார்கள். அப்பொழுது இருந்த அரசு அதிகாரிகள் அரசினுடைய சட்டதிட்டங்களுடைய வளர்ச்சிகளை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஆனால் இன்று கூறப்பட்ட இந்த கருத்துக்களைத்தான் 20 வருடங்களுக்கு முன்னாடியும் உலகம் முழுவதும் பின்பற்றுவோம்.

சுற்றுச்சூழல் மாசினை உலகளவிலும், இந்தியாவிலும் சுற்றுச்சூழலை கட்டுப்படுத்துவோம் என்று சில வரையறைகளை EIA 2006 ல் ஒரு சுற்றுச்சூழல் மாசு தடுப்புச் சட்ட மசோதா கொண்டு வந்துள்ளார்கள். அதில் கூறப்பட்ட செய்திகளையாவது இங்கு கருத்துக் கேட்புக் கூட்டத்தில் நடக்கக்கூடிய குவாரியில் பின்பற்றி உள்ளதா ? என்றால் கிடையாது. ஒரு சுரங்கத்தில் கல்லை வெட்டி எடுக்கிறோம் என்றால் அதில் எடுக்கக்கூடிய கழிவுகளை அதே பகுதியில் கொட்டுகிறோம். இந்தப் பகுதிகளில் கிரீன்பெல்ட் அமைக்கிறோம். ஒரு ஹெக்டேருக்கு 500 மரங்களை வைக்கின்றோம் என்கிறார்கள். இப்பொழுது ஏறக்குறைய 5000 மரங்கள் இருக்க வேண்டும். கூறப்போனால் 10,15 வகையான மரங்கள் எங்கேயாவது இருக்கா ? வேலி முற்களை தவிர வேறு எதுவும் இல்லை.

இந்த 25 ஏக்கரில் இங்குதான் வெட்டப்போகிறோம் என்று சுரங்க எல்லைகளில் கூறப்பட்ட செய்திகளை கடைப்பிடித்துள்ளார்களா ? இப்போது இல்லை அவர்களுடைய இஷ்டத்திற்கு எங்கு கல் இருக்கிறதோ அங்கே வெட்டுகிறார்கள். காரணம் பொதுமக்களிடம் விழிப்புணர்வு இல்லை. தலைமை நிர்வாகத்தின் பெயர் வைத்து சில தனி நபர்கள் அதில் பயனடைந்து கொண்டிருக்கிறார்கள். இனியும்

அந்த செயல் நடக்கக்கூடாது என்பதற்காகத்தான் இந்த பொதுமக்கள் கருத்துக்கேட்புக் கூட்டம் நடைபெற்று கொண்டிருக்கிறது. கனிமவளத்திற்கு சட்டவிரோத கல்குவாரிக்கு எதிராக போராடிக்கொண்டிருக்கிறோம். தொடர்ச்சியாக பல்வேறு சட்ட போராட்டங்களை முன்னெடுத்துக் கொண்டிருக்கிறோம். நேற்றுகூட கனிமவளத்தை கொள்ளையடித்த லாரியை JCP பிடித்துக் கொடுத்தோம். காவல்துறையில் அரைமணிநேரத்தில் லஞ்சத்தை வாங்கிக் கொண்டு விட்டுவிட்டார்கள். இது குளித்தலை பகுதியில் இப்போதுகூட 6 மாதத்திற்கு ஒருமுறை ஆய்வு செய்து நீர் சூழல், காற்று சூழல், ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிப்பார் என்று கூறினார். கரூர் மாவட்டத்தில் 100—க்கணக்கான கல்குவாரிகள் இருக்கிறது. இந்த தோகைமலை பகுதியில் 100 கணக்கான கிரஷர் லாரிகளில் 10 லாரியை வைத்து கிரஷர் ஆரம்பித்து இன்று 100 லாரியை வைத்து ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாடு மினரல்ஸ் நஷ்டத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது. காரணம் இந்த நிறுவனம் என்பது அரசினுடைய நிறுவனமாக இருந்தாலும் கூட தனிநபருடைய சுயலாபத்திற்காக இந்த நிறுவனம் இயங்கிக்கொண்டு இருக்கிறது. இப்பவும் சட்ட விரோதமாக இந்தக் கருத்துக்கேட்புக்கூட்டம் நடக்கிறது.

சட்டப்படி இங்கு கற்கள் வெட்டி எடுக்கப்படவில்லை. இதன் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுதான் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு நாங்கள் எடுத்துச் செல்கின்ற அடுத்த செய்தி. சம்பந்தப்பட்ட துறைகளுக்கு நடந்ததை சுட்டிக்காட்டி புகார் மனு கொடுத்து அதன் மீது உரிய நடவடிக்கை எடுக்கவில்லையென்றால் உயர்நீதிமன்றத்தை அணுகி உயர்நீதிமன்றத்தின் உத்தரவின் அடிப்படையில் ஆய்வு செய்து நிச்சயமாக அந்தக் குவாரியின் மீது நடவடிக்கை எடுப்பதற்கான ஆயத்தப் பணிகள் நிச்சயமாக செய்வோம்.

இந்தக் குவாரியினுடைய 300 மீட்டர் சுற்றளவிற்குள் குடியிருப்பு இருக்கக்கூடாது என்பது கனிம விதி சட்டம். வருவாய்த்துறை இது சம்பந்தமான அறிக்கையை கொடுக்கும்போது தமிழ்நாடு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையினுடைய முன்கூட்டியே இந்தக் கருத்துக்கேட்புக் கூட்டத்தினுடைய அறிக்கை சமர்பித்துள்ளார்கள். வருவாய்துறை சரியான ஆவணம் சமர்பிக்கவில்லை. எந்தெந்த பகுதியில் எந்தெந்த இடைவெளியில் எத்தனை மீட்டரில் எவ்வளவு வீடுகள் இருந்தாலும் ஏரி, குளங்கள் நீர்த்தேக்கத் தொட்டிகள் இருக்கிறது. எத்தனை குடியிருப்புகள் இருக்கிறது. இவையனைத்தும் சுட்டிக் காட்டப்படவில்லை. சரியான முறையை சுட்டிக் காட்டப்படவில்லை. பொதுமக்களுக்கு சென்று சேரக்கூடிய குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இருந்தாலோ அரசினுடைய கட்டுமான நீர்நிலைகள் இருந்தாலோ அவற்றிலிருந்து 500 மீட்டர் சுற்றளவிற்குள் எந்தவொரு கனிமங்களையும் வெட்டி எடுக்கக்கூடாது என்பதுதான் சட்டம்.

அருகில் வெங்கடேசபுரம் என்னும் ஊர் இருக்கும்போது இதற்கு எந்த அடிப்படையில் அனுமதி கொடுத்தார்கள் என்று தெரியவில்லை. ஆனாலும் எங்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கிறது என்று விவசாயிகள் கோரிக்கைகள் வைக்கிறார்கள். பெருமையாக இருக்கிறது. நமக்கான வாழ்வாதாரம் பல்வேறு வேலைகளுக்கு செல்லலாம். இந்தக்குவாரியால் வாழ்வாதாரத்தை ஓட்டிக்கொண்டுள்ளோம். நம்முடைய உழைப்பால் எந்த வேலைக்கும் செல்லலாம். ஆனால் இந்தக் குவாரி செயல்பட்டால் ஆடு, மாடு, கோழி, குருவி, காகம் பல்லுயிர்களும் பாதிக்கும் என்பதை நாம் உணரவேண்டும். இந்த ஒரு குவாரி மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த குவாரியும் சட்டவிரோதமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதுதான் என்னுடைய கோரிக்கை.

அதனால் கரூர் மாவட்டத்தில் 100—க்கு 99 சதவீதம் குவாரிகள் சட்டத்திற்குட்பட்டு செயல்படவில்லை. அதேதான் அவை அனைத்தும் தனிநபர் நடத்துகிறார்கள். அரசு துறையும் தன்

வருமானத்திற்காக முரண்பாடாக கண்டுகொள்வதில்லை. கனிம வளத்துறை, காவல்துறை, கண்டுகொள்வதில்லை. இவ்வளவு துறை இருந்தாலும் கனிம வளத்துறை 6 மாதத்திற்கு ஒருமுறை ஆய்வு செய்யலாம். நாம் கூறும் குற்றச்சொற்கள் மீது நடவடிக்கை எடுக்கலாம். ஆனால் எடுப்பதில்லை. ஆனாலும் இது அரசு நடத்தக்கூடிய நிறுவனம். சரியான முறையில் சரியாக சமர்பித்து இருக்கவேண்டும். அதை இந்த அரசு நிறுவனமே செய்யவில்லை என்பது வருத்தமாகவும் ஆதங்கமாகவும் இருக்கிறது.

அதனால் நாகனூர் கிராமம் சர்வே எண்.120ல் கிரானைட் குவாரிக்கான அனுமதி கொடுக்கக்கூடாது. கொடுக்கவும் முடியாது. கொடுக்கவும் விடமாட்டோம். நீதிமன்றத்தின் வாயிலாக நிச்சயம் சட்டத்தின் வாயிலாக நிறுத்துவோம். ஒருவேளை தவறான அறிக்கை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் சமர்பித்திருந்தால் நாங்கள் நீதிமன்றம் சென்றாவது இந்தக் குவாரியினுடைய சட்டவிரோத செயலை சுட்டிக்காட்டி நிச்சயமாக தடுத்துநிறுத்துவோம். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுங்கள் இல்லை என்றால் தொடர்ந்து போராடுவோம். வாய்ப்புக்கு நன்றி.

8. <u>திரு.சுப்பையா, கருத்தப்பட்டி:</u>

இந்தக் குவாரி இயங்காமல் உள்ளதால் எங்களுக்கு சிரமமாக உள்ளது. ஆகையால் கல்குவாரிக்கு அனுமதி தரவேண்டும்.

9. <u>திருமதி.கோவிந்தம்மாள், மேட்டுப்பட்டி:</u>

நாகனூர் கிராமத்தில் தான் இருக்கிறோம். எங்கள் குடும்பத்தில் உள்ள அனைவரும் கல்லுடைக்கும் தொழில் செய்துதான் பிழைக்கின்றோம். இந்த வேலையில்லாததால் எங்கள் மகன் குடும்பத்தை விட்டு வெளியூரில் சென்று வேலைக்குச் செல்கிறார்கள். எங்கள் குடும்பம் கஷ்டத்தில் உள்ளது. இந்த வேலை இருந்தால் எங்கள் குடும்பம் பிழைத்துக் கொள்ளும். இதற்கு அனுமதி கொடுங்கள். இந்த குவாரியால் சுற்றச்சூழலுக்கு எந்த பாதிப்பும் இல்லை இந்த குவாரிக்கு அனுமதி கொடுக்கலாம்.

10. <u>திரு.கருப்பையா, வருந்திப்பட்டி:</u>

10, 15 ஆண்டுகளுக்கு முன்பாக இந்தப் பகுதியில் ஆண்கள் மன்றம், பெண்கள் மன்றம் வாயிலாக கல்குவாரிகளில் கல் உடைத்து வருவாய் ஈட்டிக் கொடுத்தார்கள். ஆனால் எப்போது இயந்திரங்கள் மூலம் கனிமங்கள் வெட்டி எடுக்க ஆரம்பித்தார்களோ அந்த நாளிலிருந்து தோகைமலையினுடைய வருவாயும் குறைந்துவிட்டது. மக்களுடைய உழைப்பும் குறைந்துவிட்டது. பெரிய கனிம வளங்களை திறக்க முன்வரும் இந்த அரசாங்கம். அரசு நிலங்களில் உள்ள சிறு, சிறு குவாரிகளில் முன் மாதிரியாக இந்த மன்றங்களை கொண்டு மனித சக்திகளைகொண்டு உடைப்பதற்காக வழிமுறைகளை செய்ய வேண்டும். இந்த மாதிரி பெரிய நிறுவனங்களில் 10,15 நபர்களுக்குத்தான் வேலை கிடைக்கும்.

இந்த மகளிர் சுயஉதவிக்குழு மற்றும் சூளைகள் வாயிலாக அரசு புறம்போக்கு நிலங்களில் உள்ள சின்ன சின்ன குவாரிகளை எடுத்து மனிதசக்தியை பயன்படுத்தி மாசு ஏற்படாமல் உடைக்கக்கூடிய தொழில் வந்தால் இந்த கல்லுடைக்கும் தொழிலாளர்கள் பயனடைவார்கள். அவர்களுக்கு வேறு தொழில் தெரியாது. அதனால் இவர்கள் திருச்சிக்கு கட்டிட வேலைக்குச் சென்று இரவு 9 மணிக்கு திரும்புவது மனதிற்கு வருத்தமாக உள்ளது. எனவே இந்த பெரிய அளவிலான தொழில் நிறுவனங்களை திறப்பதற்கு முன் வரும் அரசாங்கம் சிறுதொழில் நிறுவனங்களை மகளிர் சுய உதவிக்குழுவின் வாயிலாக கல் உடைக்கும் தொழிலை நடத்த முன்வரவேண்டும்.

அதேபோல் குவாரி நடத்துவதற்கு கூறப்பட்ட விதிமுறைகளில் சாலை வசதிகளைப் பற்றி எதுவும் கூறவில்லை. ஒவ்வொரு லாரியும் 80 டன், 90 டன் செல்கிறது. பாளையம் வரையில் இரவு நேரங்களில் பயணம் செய்ய முடியவில்லை. இந்த கல்குவாரி லாரி செல்வதனால் இந்தப் பக்கம் மணப்பாறையில் சூலைகள் இல்லை. இந்தக் கல்குவாரியிலிருந்து கல்போகாததால் இப்போது சாலைகள் பரவாயில்லை.

இந்த தமிழ்நாடு மினரல்ஸ் கல்குவாரி இயங்க ஆரம்பித்துவிட்டால் இதேபோல் தனியார் குவாரிகளும் செயல்பட ஆரம்பித்துவிடும். சட்டவிரோதமான செயல்கள் நிறைய நடைபெற்று வருகிறது. இரவு நேரங்களில் ஒரு கல்லுக்கு அனுமதிபெற்று 2 கல் எடுத்துச் செல்கிறார்கள். இவையனைத்தும் இந்தப் பகுதியில் நடந்துகொண்டிருக்கிறது. இந்த பெரிய நிறுவனம் வந்தால் பாதிப்பு தான் வரும். நன்மைகள் கண்டிப்பாக நடக்காது. 100, 120 அடி எடுத்தார்கள் என்றால் இங்குள்ள விவசாயங்கள் அனைத்தும் பாதிக்கப்படும்.

மக்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்க வேண்டும் என்று இந்த அரசாங்கம் நினைத்தால் சிறுசிறு தொழில் அரசு புறம்போக்கு நிலங்களில் உள்ள பாறைகளை கண்டறிந்து சுயஉதவிக்குழு பெண்கள் மற்றும் ஆண்கள் மன்றம் வாயிலாக மனித சக்தியைக்கொண்டு உடைத்து ராட்சத கிரைன்கள் பயன்படுத்தாமல் மக்கள் சக்தியால் சிறு கருவிகளைக் கொண்டு மாசு ஏற்படாமல் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தினால் வேலைவாய்ப்பும் கிடைக்கும். இந்தப் பகுதியில் கட்டுமான பொருட்களுக்கான தட்டுப்பாடுகள் இருக்காது. நம்முடைய பகுதியில் கிடைக்கும் கற்களுக்கு நல்ல வரவேற்பு உள்ளது.

கரூர் பகுதியில் இருந்து கொண்டுவரும்போது டிரான்ஸ்போர்ட் செலவு அதிகமாகும். இந்தப் பகுதியில் கட்டுமான பொருட்கள் கிடைக்கும்போது நாம் வேறு இடங்களில் கையேந்த கூடிய நிலைமை வரக்கூடாது. பெரிய பெரிய நிறுவனங்களுக்கு கருத்துக்கேட்புக் கூட்டம் நடத்த முன்வரக்கூடிய அரசாங்கம் மக்களின் வறுமைநிலையைப் பயன்படுத்தி சிறு சிறு குவாரிகளுக்கு மனித சக்தியைப் பன்படுத்தி அவர்களுடைய வாழ்வாதாரத்தை பெருக்க உதவி செய்யுமாறு இந்தக் கூட்டத்தின் வாயிலாக கேட்டுக்கொள்கிறேன். நன்றி வணக்கம்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் இந்தக் கருத்துக் கேட்புக் கூட்டத்தில் நடைபெற்ற பொதுமக்களின் கருத்துக்களை வீடியோவாகவும், எழுத்துரு மூலமாகவும் பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என்று கூறினார்.

<u>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்:</u>

இறுதியாக தனது நன்றி உரையில் இந்த பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு தலைமையேற்று நடத்திய உதவி ஆணையர் (கலால்) உள்ளிட்ட அரசு அலுவலர்களுக்கும், காவல்துறையினருக்கும், பத்திரிக்கையாளர்களுக்கும், பொதுமக்களுக்கும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பாகவும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சார்பாகவும் தனது நன்றியை தெரிவித்தார். இறுதியாக நாட்டுப்பண் ஒலித்தது. அத்துடன் பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டம் நிறைவு பெற்றது.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,**
**கரூர் மாவட்டம்.**

**உதவி ஆணையர் (கலால்),**
**கரூர் மாவட்டம்.**